திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பயிற்சி நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு விலைமதிப்புள்ள அறிவியல் கண்ணாடிப் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பயிற்சி நிலையம் பெரும்பாலும் பயிற்சி கொடுக்க இருக்கும். ஆனால் சென்னையிலே இருப்பது மட்டும் உற்பத்தியை அதிகப்படுத்த முயற்சியெடுக்கிறோம். எவ்வளவு உற்பத்தி என்ற விவரம் இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, out of the trainees, how many are girl students ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம்தான் இருக்கிறது. ஆண், பெண் விவரம் இல்லை.

* 70 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சி வட்டாரத்தில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

விசைக் கலப்பைகள்

* 71 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறிய வயல்களில் உபயோகிக்கத் தக்க பல காரிய விசைக் கலப்பைகளை (power fillers) தமிழகத்திலேயே தயாரிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையைத் தஞ்சையிலேயோ, திருச்சியிலேயோ துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : "சதர்ன் இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன்" என்ற நிறுவனம் 10,000 பவர் டில்லர்ஸ் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு, கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய்க்குத் திட்டமிட்டு அதற்கான அனுமதியை மத்திய சர்க்காரிடத்தில் கேட்டிருக்கிறது. வந்தவுடன் இடத்தைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

TRUTH ALONE TRIUMPHS